the Government have got information as to why the higher Revenue Officials in the Corporation did not contact the Police in time ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டு இருப்பது—

Immediately the Periamet Police Station was informed and complaint was filed. Then the Deputy Commissioner came. என்று தான் இருக்கிறது. யார் கொடுத்தார்கள் என்ற விவரங்கள் இல்லை.

நகராட்சித் தலைவர்கள்

* 555 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள மொத்த நகராட்சிகள் தற்போது எத்தனை?

(இ) அந்த நகராட்சிகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எந்தெந்த நகராட்சிகளில் தலைவர்களாக உள்ளனர்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 93.

(இ) தற்போது எந்த நகராட்சியிலும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தலைவர்களாக இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எல்லா சமுதாயத் தினருக்கும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வாய்ப்பு அளிக்கும் அடிப்படையிலே சென்னை மாநகராட்சி மன்றத்தின் மேயர் தேர்ந்து எடுக்கப்படுகின்ற முறையிலே அதாவது ஆண்டுக்கு ஒரு வகுப்பினரைச் சேர்ந்தவர் மற்ற நகராட்சிகளுக்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வழி வகைகளை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு கன்வென்ஷன், மரபாகக் கையாளப்பட்டு வருகிறது. சட்டத்தின் அடிப்படையிலே அந்த முறை கடைப்பிடிக்கப்படவில்லை. மரபு தொடர்ந்து கடைப் பிடிக்கப்பட்டு வருவதின் காரணமாக 8 ஆண்டுக்காலத்திற்கு ஒரு முறை தாழ்த்தப்பட்டவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறை இருக்கிறது. அதேமாதிரி ஆங்காங்கு இருக்கின்றவர்கள் அப்படிப்பட்ட ஒரு மரபை ஏற்படுத்துவார்களானால் சாலச் சிறந்த தாக இருக்கக்கூடும். இந்துக்களும் முஸ்லீம்களும் இருக்கின்ற சில நகரங்களிலே ஒரு தடவை ஒரு இந்து தலைவராகவும் ஒரு தடவை முஸ்லீம் தலைவராகவும் இருந்துவருகின்ற முறையை கைக்கொண்டு வருகிறார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தலைவராக வரக்கூடாது என்ற தடை இல்லை. ஆங்காங்குள்ளவர்கள் தாழ்த்தப்பட்டவர் தலைவராக வருவதற்கு வசதிகளைச் செய்துதருவார்களானால் அது வரவேற்கப்படவேண்டிய ஒன்று ஆகும். ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இராணிப்பேட்டை நகராட்சியிலே தலைவராக இருப்பவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்படுகிறது.